கனிமொழி கருணாநிதி எம்.பி. முடித்து வைத்தார்! 'நீட்'தேர்வைக் கண்டித்து

# தூத்துக்குடியில் மாபெரும் உண்ணாவிரதம்!

## அமைச்சர்கள் கீதாஜீவன் - அனிதா ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தனர்!

தூத்துக்குடி, ஆக.21-

மாநில தி.மு.க இளைஞர் அணி செயலாளரும் விளையாட்டு மற்றும் மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின், மாநில மருத்துவ அணி தலைவர் கனிமொழி சோமு எம்.பி, மாநில மாணவர் அணி செயலாளர் எழிலரசன் எம்.எல்.ஏ, ஆகியோர் அறிவிப்பிற்கிணங்க நீட்தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து தூத்துக்குடி வடக்கு-தெற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவரணி, மருத்துவ அணி, சார்பில் தூத்துக்குடி சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்திற்கு வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதியழகன், தெற்கு மாவட்டஇளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் வெற்றிவேல், வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர்அருண்குமார்,வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வக்கீல் சீனிவாசன், தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் சமூகநலன் மற்றும் பெண்கள் உரிமைத் துறை அமைச்சருமான கீதாஜீவன், தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் மீன்வளம் மற்றும் மீனவர்நலன் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் தொடங்கி வைத்து கண்டன உரையாற்றினார்கள்.

கண்டன உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்து அவர்களின் உயிரை பறிக்கின்ற உயிர் கொல்லியாக நீட்தேர்வு உருவெடுத்து இருக்கிறது. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை வரை தொடர்கிறது. இந்த மரணங்கள் அனைத்திற்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசும், அ.தி.மு.க.வினரும் ஆளுநர் ரவியும் காரணம் என குற்றம் சாட்டி நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்தி.மு.க.வை பொறுத்த வரை கலைஞர் காலம் தொட்டு இன்று தளபதி காலம் வரை தொடர்ந்து நீட்தேர்வை எதிர்த்து வருகிறோம். ஒன்றிய அரசு தொடர்ந்து பழிவாங்கும் செயலில் ஈடுபடுகிறது. நீட் தேவையுள்ள மாநிலங்களில் பயன்படுத்திகொள்ளலாம் என்று தான் அந்தசட்டத்தில் கூறப்படுகிறது. அதன்படி தெலுங்கான, ஆந்திரா, ஜம்முகாஷ்மீர், மாநிலங்களில் நீட்டை அமுல்படுத்தவில்லை. அ.தி.மு.க.வின் எடப்பாடி ஆட்சி காலத்தில் தான் தமிழகத்திற்குள் நீட்தேர்வு வந்தது. ஆளுநர் அரசுக்கு எதிராக எல்லா செயல்களிலும் ஈடுபட்டு தனக்கு அதிகாரம் இருப்பதாக காட்டிக் கொண்டு குட்டி அரசாங்கத்தை நடத்துகிறார் என்று பேசினார்.

அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பேசுகையில் ஒன்றிய அரசு உள்நோக்கத்தோடு தமிழக அரசை வஞ்சிக்கிறது. பல்வேறு வகையில் ஜெயலலிதா இருக்கும் வரை இங்கு நீட் வரவில்லை எடப்பாடி வந்த பிறகுதான் தமிழகத்தில் அது நடைமுறைக்கு வந்தது இதற்கு காரணம் அ.தி.மு.க. தான் என்று பேசினார்.

மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில் ஐந்து முறை தமிழக முதலமைச்சராக இருந்து சுமார் 25 ஆண்டுகாலமாக தமிழக மக்கள் நலனில் அக்கறை கொண்டு பணியாற்றிய கலைஞர் பல ஜனாதிபதி பிரதமர்களை உருவாக்கி தேசிய அளவில் தலைவர்களின் நட்போடு பணியாற்றினார். அதே வழியில் தற்போது தளபதியார் அதை தொடர்ந்து செய்து வருகிறார். ஒன்றி அரசு கொண்டு வரும் தேவையில்லாத சட்டங்களையும் திட்டங்களையும் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டி வருவதால் தமிழ்நாட்டின் மீது ஒன்றிய அரசுக்கு கோபம் வருகிறது. அதன் வெளிப்பாடாக மிரட்டும் வகையில் அமைச்சர், எம்.பிக்களை மிரட்டி பார்க்கின்றனர். தமிழகத்தில் ஜிஎஸ்டி வரி மூலம் பல கோடியை பெற்றுக்கொண்டு தமிழகத்திற்கு முறையாக வழங்குவதில்லை. ரெயில் விமானம் என ஒன்றிய அரசில் வசூல் செய்யும் பல்வேறு வகையான வருமானங்களை அனைத்து மாநிலங்களுக்கும் பிரித்து கொடுக்க வேண்டும் அது தான் நடைமுறை அதை செய்வதில்லை. இங்கு ஒரு மாநில தலைவர் நடைபயணம் என்ற பெயரில் அனைத்து ஆதராமற்ற குற்றச்சாட்டுகளை கூறிவருகிறார். அவரது கட்சியில் இருக்கின்ற பலர் பல்வேறு வகையில் குற்றம் செய்தவர்கள் தான் இருக்கின்றனர். தி.மு.க.வில் இருக்கின்ற 23 அணி நிர்வாகிகளும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிருபிக்கும் வகையில் தமிழக நலன் பாதுகாக்க தலைமைக் கழகம் எந்த அறிவிப்பாக இருந்தாலும் முன்நின்று செயல்பட்டு 40 தொகுதிகளிலும் வெற்றிக்கனியை பறிப்போம் என்று பேசினார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் சண்முகையா எம்.எல்.ஏ, முன்னாள் எம்.எல்.ஏ டேவிட் செல்வின், துணை மேயர் ஜெனிட்டா, ஆவின்சேர்மன் சுரேஷ்குமார், வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரதீப், மகேந்திரன், ராதாகிருஷ்ணன், பாரதி, ஜோசப் அமல்ராஜ், தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அம்பாசங்கர், வக்கீல் பால்துரை, பாலமுருகன், சுதாகர், ஸ்டாலின், குமார்பாண்டியன், வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் செல்வமணிகண்டன், கோகுல்நாத், கனகராஜ், வினோத்ராஜ், பிரதீபா, தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பிரவின், காட்வின்ராஜா, பிரஷாந்த், தங்கமாரிமுத்து,

மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர், துணை அமைப்பாளர்கள் சங்கரநாராயணன், சிவக்குமார் என்ற செல்வின், ரவி, முகம்மது ஜெயலாப்தீன், பிரவீன்குமார், ஒன்றியச் செயலாளர்கள் சரவணக்குமார், ஜெயக்கொடி, சுப்பிரமணி, ஜோசப், ரவி, ராமசாமி, ரமேஷ், இளையராஜா, காசிவிஸ்வநாதன், மாநில பேச்சாளர் சரத்பாலா, மாவட்ட அணி அமைப்பாளர்கள் அந்தோணிஸ்டாலின், அன்பழகன், குபேர் இளம்பரிதி, வீரபாகு, துறைமுகம் ராமசாமி, சௌந்திரராஜன், கவிதாதேவி, ரமேஷ், ரவி என்ற பொன்பாண்டி, செல்வக்குமார், ராஜேந்திரன், வக்கீல் ரகுராமன். துணை அமைப்பாளர்கள் அந்தோணி கண்ணன், ரெங்கசாமி, கணேசன், எட்வர்ட், மனோகரன், அருணாதேவி, ராமர், பார்வதி, நாகராஜன், சரவணன், வக்கீல் நாகராஜன்பாபு,

மாவட்ட மருத்துவ அணி துணைத் தலைவர்கள் மரியசேவியர், முருகராஜ், மாநில வர்த்தக அணி இணைச்செயலாளர் உமரி சங்கர், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், தெற்கு மாவட்ட அவைத்தலைவர் அருணாச்சலம், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆறுமுகம், ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் வக்கீல் பாலகுருசாமி, நிர்மல்ராஜ், அன்னலட்சுமி, கலைச்செல்வி, மாநகர அவைத்தலைவர் ஏசுதாஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டு ராஜா, கஸ்தூரிதங்கம்,

மாநகர துணைச்செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பிரமிளா, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், மேகநாதன், சுரேஷ்குமார், ரவிந்திரன், ராமகிருஷ்ணன், சிவக்குமார், மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், சக்திவேல், சேர்மபாண்டியன், செல்வகுமார், செந்தில்குமார், மாநகர அணி அமைப்பாளர்கள் ஜீவன்ஜேக்கப், முருக இசக்கி, ஜெயக்கனி, சங்கர், துணை அமைப்பாளர்கள் கிறிஸ்டோபர் விஜயராஜ், டைகர் வினோத், பால்ராஜ், ரமேஷ், வக்கீல் ரூபஸ், தொழிற்சங்க மண்டல செயலாளர் முருகன்,

மாநகர இலக்கிய அணி துணை தலைவர் நலம் ராஜேந்திரன், வக்கீல்கள் சுபேந்திரன், ஆனந்தகபேரியல்ராஜ், வட்டச்செயலாளர்கள் கதிரேசன், சதீஷ்குமார், கீதாசெல்வமாரியப்பன், சுப்பையா, ரவீந்திரன், பாலகுருசாமி, பொன்னுச்சாமி, ராஜாமணி, கருப்பசாமி, சுரேஷ், கங்காராஜேஷ், டென்சிங், லியோ, ஜான்சன், சேகர், பொன்ராஜ், முத்துராஜா, பாலன், தகவல் தொழில்நுட்ப அணி சுரேஷ் குமார், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மாரிசெல்வம்,

கவுன்சிலர்கள் சரவணக்குமார், விஜயகுமார், ஜெயசீலி, நாகேஸ்வரி, வைதேகி, தெய்வேந்திரன், கந்தசாமி, ஜான்சிராணி, அந்தோணி பிரகாஷ்மார்ஷல், முத்துவேல், சுயம்பு, சுப்புலட்சுமி, பொன்னப்பன், ராஜேந்திரன், ராஜதுரை, ஒன்றிய கவுன்சிலர் அந்தோணிதனுஷ்பாலன், மற்றும் கருணா, பிரபாகர், அல்பட், மணி, பாரி, லிங்கராஜா, பாஸ்கர், மகளிர் அணி பெல்லா, ஜெபராணி, சத்யா, உள்பட 2000 பேர் கலந்து கொண்டனர்.

பின்னர் மாலையில் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டன உரையாற்றினார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! மோடிக்கு அதாவது பா.ஜ.க.வுக்கு ஓட்டுப் போட்ட விரலை, ஒருவர் துண்டித்துக் கொண்டுவிட்டாராமே ?

**பட்டணம் :** **ஆமாம்; மராட்டிய மாநிலம், உல்லாஸ் நகரைச் சேர்ந்த தனஞ்செய் நானாவரே என்பவர்தான் அப்படி ஓட்டுப் போட்ட விரலை வெட்டிக் கொண்டவர்.**

**அவருடைய சகோதரர் மற்றும் சகோதரரின் மனைவி 1.8.2023 அன்று தற்கொலை செய்து கொண்டனர். இந்தத் தற்கொலை குறித்துப் போலீசில் புகார் கொடுத்தும், தற்கொலைக்கான காரணத்தை அறிந்திருந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்காத போலீசைக் கண்டித்தும், நீதி வேண்டியும்; மோடி மற்றும் ஷிண்டேவுக்கு (பா.ஜ.க.வுக்கு) வாக்களித்த தனது ஆட்காட்டி விரலைத் துண்டித்துக் கொண்டார் தனஞ்செய் நானாவரே.**

**வாக்களித்த அனைவர்க்கும் பாடமாக இருக்கட்டுமே என்று, விரலை வெட்டிக் கொண்ட வேதனை நிகழ்வை வீடியோவாக்கி வெளியிட்டுள்ளார்.**

**அந்த வீடியோ மராட்டிய சமூக வலை தளத்தில் வைரலாகி வருகிறதாம் !**

**'தலை கொடுத்தான் தம்பி' என்பதைப் போல், பா.ஜ.க.வுக்கு வாக்களித்த கடும் விரக்தியில், 'விரல் கொடுத்தான் தம்பி' என்று இதையும் கடந்து போய்விடக் கூடுமா ?**

